# சிவராத்திரி விளக்கம்

## From the
## VYASA BHARATA AGAMA SHILPA SADAS
## held at Ilayathangudi, Tamilnadu in 1962

சிவராத்திரி என்பது, சிவபெருமானுக்கு மிகவும் விருப்பமான இரவு. திரயோதசி என்பது உமா தேவியார் வடிவம் என்றும், சதுர்த்தசி என்பது சிவபெருமானுடைய வடிவம் என்றும் காரணாகமம் கூறுகிறது. பஞ்சபௌதிகாதிப் பிரளயங்களுக்கப்பால், மகாப் பிரளயத்தில் உமா தேவியார் மட்டும் தனித்து நின்று, சிவபரஞ்சுடருடன் கூடும் காலமே சிவராத்திரி எனப்படும்.

சிவராத்திரியினுடைய காலத்தை உத்தமம், மத்யமம், அதமம் என்று மூன்று விதமாகக் கூறுகிறார்கள்.

மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய ராத்திரி உத்தமம் என்று கூறப்படுகிறது. மாசி மாதத் தேய்பிறையில் உதயம் முதல், நடுநிசி வரையில் திரயோதசியும், அதற்குமேல் சதுர்த்தசியும் கூடியது உத்தமம் என்று கூறப்படுகிறது. மாசி மாதத் திரயோதசி அஸ்தமனம் வரை இருந்தபிறகு, இரவு முழுவதும் சதுர்த்தசி கூடியதும் உத்தமமே ஆகும். அஸ்தமனத்துக்குப் பிறகு 29 நாழிகை

வரையில் திரயோதசியும், அதற்குமேல் ஒரு நாழிகை சதுர்த்தசி இருப்பினும், அன்றே சிவராத்திரி அநுஷ்டித்தல் வேண்டும் என்று சிவாகமம் கூறுகிறது. உதயம் முதல் மறுநாள் உதயம் வரை சதுர்த்தசி கூடியிருப்பின், அதுவும் உத்தமம் என்றே கூறுகிறது. காலையில் திரயோதசி, மத்தியில் சதுர்த்தசி, இரவின் முடிவில் அமாவாசை கூடியிருப்பின், அது மத்திம சிவராத்திரி என்று கூறுகிறது. அமாவாசை சம்பந்தமான சதுர்த்தசியில் சிவராத்திரியைக் கொண்டாடக்கூடாது என்று சொல்வார்கள். அமாவாசையின் சம்பந்தம் இருப்பின் குருதோஷமுடையது என்பர். ஆயினும் திரிவோணம், அவிட்டம், சதயம் இவை மூன்றில் ஒன்று கூடியிருக்குமாயின், அந்த அமாவாசை சம்பந்தமான தோஷம் நிவிருத்தி அடைகிறது என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

சிவராத்தியன்று பல ரிஷிகணங்கள் சிவபெருமானை அர்ச்சித்துப்பாவத்திலிருந்து விடுபட்டார்கள் என்று காரணாகமம் கூறுகிறது.

சிவராத்திரியில் இரண்டு வகை நியமங்களை முக்கியமாக அநுஷ்டிக்க வேண்டும். ஒன்று, தூக்கத்தை விட வேண்டும். மற்றொன்று, உபவாசம் இருத்தல் வேண்டும். தூக்கத்தை விடுவதனால் எல்லாக் காரியங்களையும் நம்மால் சாதிக்க முடியும்

என்று சிவாகமம் கூறுகிறது. உபவாசம் இருப்பதனால் ஆயுள் வளரும்; செல்வம் உண்டாகும்; புகழ் உண்டாகும். விரும்பிய பயனையெல்லாம் அடையலாம்.

சிவராத்திரியன்று சிவபெருமானை நான்கு யாமங்களில் பூஜை செய்ய வேண்டும். நான்கு வர்ணத்தவர்களும், சிவ தீக்ஷை பெற்றவர்களாக இருப்பின், ஆத்மார்த்த பூஜை செய்த பிறகு, பரார்த்த பூஜை செய்ய வேண்டும். நான்கு காலத்தில் நான்கு விதமான நிவேதனங்கள் செய்ய வேண்டும். நான்கு வித விசேஷ புஷ்பங்களால் பூஜிக்கவேண்டும். நான்கு வித வஸ்திரங்களைச் சாத்துதல் வேண்டும். நான்குவிதமான தண்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

முதல் யாமத்தில் அஷ்டோத்தரசத (108) கலசம் வைத்துப் பூஜை செய்து, அபிஷேகம் செய்ய வேண்டும். இரண்டாம் யாமத்தில் நாற்பத்தொன்பது கலசங்கள் வைத்து, ஸ்தாபனம் செய்து சிவபெருமானைப் பூஜை செய்தல் வேண்டும். மூன்றாவது யாமத்தில் இருபத்தைந்து கலச ஸ்தாபனம் வைத்து, ஆண்டவனை அபிஷேகித்தல் வேண்டும். நான்காவது யாமத்தில் ஒன்பது கலசம் வைத்துப் பூஜை செய்து சிவபெருமானை அபிஷேகித்தல் வேண்டும்.

அபிஷேகத்தில் பலவிதமான பொருள்கள் இருப்பினும், அந்த அந்த காலத்துக்குரிய விசேஷமான பொருள் இன்னதென்று ஆகாமம் கூறுகிறது. முதல் காலத்தில் பஞ்சகவ்வியம் மிகச் சிறந்தது. இரண்டாவது காலத்தில் பஞ்சாமிருதம் மிகவும் முக்கியம். மூண்றாவது காலத்தில் பழச்சாறு சிறப்புடையது. பழங்களில் மா, பலா, வாழை என்னும் மூன்றும் சிறந்தன. இவற்றை முக்கனி என்பார்கள். நான்காவது காலத்தில் சந்தனாபிஷேகம் மிகவும் முக்கியம்.

வஸ்திரங்களிலும் இத்தகைய சிறப்பு உண்டு. முதல் காலத்தில் சிவப்புநிற ஆடையும், இரண்டாவது காலத்தில் மஞ்சள் நிற ஆடையும், மூன்றாவது காலத்தில் வெண்ணிற ஆடையும், நான்காவது காலத்தில்  நீலநிற ஆடையும் அணிவித்தல் வேண்டும். வாசனைப் பொருள்களைப் பற்றியும் வரையறை உண்டு. முதல் காலத்தில் சந்தனம், பச்சைக் கற்பூரம் ஆகியவற்றை ஆண்டவனுக்கு அர்பித்தல் வேண்டும். இரண்டாவது காலத்தில் அகில், கஸ்தூரி முதலியவற்றைச் சாத்தல் வேண்டும். மூன்றாவது யாமத்தில் சந்தனம், பன்னீர் என்பவற்றைச் சாத்தச் செய்யவேண்டும். முதல் காலத்தில் பிம்ப புஷ்பமும், இரண்டாவது காலத்தில் தாமரையும், மூன்றாவது காலத்தில் ஜாதி புஷ்பமும், நான்காவது காலத்தில் நந்தியாவர்த்தமும் சாத்தல் வேண்டும்.

ஒவ்வொரு காலத்துக்கும் உரிய விசேஷ நிவேதனம் இன்னது என்ற திட்டமும் இருக்கிறது. முதல் காலத்தில் பயறுகலந்த அன்னம் என்று சொல்வார்கள்; அதுதான் வெண்பொங்கல் இரண்டாவது காலத்தில் பாயசான்னம் சிறந்தது. மூன்றாவது காலத்தில் எள்ளன்னம் சிறந்தது. நான்காவது காலத்தில் சுத்தான்னம் சிறந்தது.

ஆவணி மாசம் பிள்ளையார் பூஜையினால் தடை நீங்கி, யோகாமிருதம் அருந்தி, ஆத்மசுத்தி அடைந்து, புரட்டாசி மாத நவராத்திரி பூஜையில் இச்சை, ஞானம், கிரியை என்று சொல்லக்கூடியவைகளைக் கண்டு, ஐப்பசி மாத விஜய தசமியினால் மிருக யாத்திரையால் காமக் குரோத லோப மோக மத மாச்சரியம் என்று சொல்லும் அரிஷட் வர்க்கமாகிய புலிகளை வேட்டையாடி, கார்த்திகைத் தீப தரிசனத்தினால் மாயையை அழித்து, மார்கழி தரிசனத்தினால் பேரானந்தத்தைக் கண்டு, தைப்பூசத்தினால் பேரின்பக் கடலில் மூழ்கி, மாசி மாதத்துச் சிவராத்திரியினால் சிவசாயுஜ்யத்தை அடைவார்கள்.